**CC.No**.155/2025

**Date**: 26.02.2026

**ம.சா.** 1. செல்வகுமரன் த/பெ. ராஜன், காரைக்குடி

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) புகார்தாரரை தெரியுமா அல்லது அவரது அப்பாவை தெரியுமா என்றால் இருவரையும் தெரியும் முதலில் அவரது அப்பாவை தெரியும் சுமார் 4 ஆண்டுகளாக தெரியும். பழைய மர பீரோ வாங்கி விற்றதாகவும் அதில் புகார்தாரர் தரகராகவும் செயல்பட்டுள்ள விபரம் சொல்லியுள்ளது, சரியா என்றால் சரிதான். எதிரியின் தகப்பனார் வீட்டில் இருந்த தேக்கு மர பீரோவை நான் வாங்கி விற்றேன். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கி விற்றேன். 30 ஆயிரம் ரூபாய்க்கு விற்றேன். இந்த வழக்கு கொடுக்கல் வாங்கல் முன்பு வேறு ஏதேனும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி கொடுக்கல் வாங்கல் யாருடன் இருந்தது என்றால் எதிரியுடன் இருந்தது. அதில் ஏதேனும் பணம் தரவேண்டி நிலுவையில் உள்ளதாக என்றால் இல்லை. மேற்படி முந்தைய கொடுக்கல் வாங்கல் இந்த வழக்கிற்கு முன்பே முடிக்கப்பட்டதா அல்லது வழக்குதாக்கல் செய்த பின்புதான் முடிக்கப்பட்டதா என்றால் வழக்கிற்கு முன்பே முடிக்கப்பட்டது.**

**2) தற்போதைய கடன் எதற்காக எதிரி வாங்கினார் என்றால் மருத்துவ செலவிற்காக வாங்கினார். யாருடைய மருத்துவ செலவிற்கு என்று கேட்டு வாங்கினார் என்றால் அவரது தங்கையின் மருத்துவசெலவிற்காக வாங்கினார்.மேற்படி கடன் எப்போது கேட்டார் என்றால் நான் தொகை**

கொடுப்பதற்கு 15 முதல் 20 நாட்களுக்கு முன்பு கேட்டார். நான் கடனை எந்த நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் நோட்டு 160 நோட்டுகள் கொடுத்தேன். மேற்படி பணத்தை எங்கிருந்து கொடுத்தேன் என்றால் வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேன். வங்கியில் இருந்து எத்தனை தவணைகளில் பணத்தை எடுத்தேன் என்றால் 2 தவணைகளில் எடுத்தேன். எவ்வளவு தொகை எடுத்தேன் என்றால் இரண்டு முறை 40 ஆயிரம் எடுத்தேன். பணம் கொடுத்த போது யார் யார் உடன் இருந்தனர் என்றால் பாலசுப்பிரமணியன் என்பவர் இருந்தார். மேலும் அழகம்மை மற்றும் அவரது அப்பா இருந்தனர். கடனுறுதிசீட்டை பூர்த்தி செய்வதற்கு யார் விபரங்கள் சொன்னார்கள் என்றால் நானும் எதிரியும் சேர்ந்து சொன்னோம். பாலசுப்பிரமணியன் எதற்காக எனது வீட்டிற்கு வந்தார் என்றால் வியாபாரம் சம்பந்தமாக வந்திருந்தார்.

3) சாட்சிகள் கடனுறுதிசீட்டை நிரப்பிய எழுதுகோலால் தான் கையொப்பம் செய்தார்களா அல்லது வேறு எழுதுகோலினால் கையொப்பம் செய்தார்களா என்றால் கடனுறுதிசீட்டை நிரப்பி எழுதுகோலை வைத்துதான் கையொப்பம் செய்தனர். எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிரியிடம் என்ன என்ன தேதிகளில் பணத்தை திருப்பி கேட்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை. காசோலையில் சொல்லியுள்ள தொகையை எப்படி கணக்கு செய்துபூர்த்தி செய்தார்கள் என்றால் காசோலை கொடுத்த தேதியன்றே வட்டியும் முதலுமாக கணக்கீடு செய்து காசோலையில் உள்ள தொகை 85 ஆயிரத்து 600 என்று பூர்த்தி செய்து கொடுத்தனர். மேற்படி வழக்கு காசோலையை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் தெரியாது என் முன்பு கையொப்பம்

மட்டும் செய்தார். அவர்களே பூர்த்தி செய்து கொண்டு வந்தார். நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வழக்கு காசோலை மற்றும் கடனுறுதிசீட்டு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அது ஏற்கனவே பழைய கொடுக்கல் வாங்கலுக்காக செக்யூரிட்டிக்காக வாங்கி வைத்திருந்த கடனுறுதிசீட்டு மற்றும் காசோலையை வைத்து நான் தவறாக வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் எனக்கும் எதிரிக்கும் எந்த கொடுக்கல் வாங்கல் இல்லை என்றாலும் அதற்கான இந்த வழக்கு காசோலை தரப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி வழக்கு காசோலையை எதிரி என்னிடம் வழங்கவில்லை என்றாலும் அதை வசூலுக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்தவும் இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த சட்ட அறிவிப்பு எதிரிக்கு கிடைக்கப்பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி கொடுத்து முடித்த பழைய கடனுக்கான ஆவணங்களை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.26 14:51:13 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)